### இந்த ஆண்டு பணிகளை தொடங்க திட்டம்:

# மாதவரம்-திருவான்மியூர் இடையே ரெயில் நிலையங்கள் அமைக்க விரைவில் டெண்டர்

## மெட்ரோ ரெயில் நிறுவனம் நடவடிக்கை

சென்னை, பிப்.10-

மாதவரம்-திருவான்மியூர் இடையே ரெயில் நிலையங்கள் அமைக்க விரைவில் டெண்டர் விடப்பட இருக்கிறது. இந்த ஆண்டு பணிகளை தொடங்கவும் மெட்ரோ ரெயில் நிறுவனம் திட்டமிட்டு உள்ளது.

### மெட்ரோ ரெயில்

விரைவான, பாதுகாப்பான போக்குவரத்து பயணத்துக்காக சென்னையில் மெட்ரோ ரெயில் திட்டம் கொண்டு வரப்பட்டது. முதல் கட்டமாக கோயம்பேடு- ஆலந்தூர், சின்னமலை- விமான நிலையம் வரை உயர்மட்ட பாதையிலும், திருமங்கலம்- சென்ட்ரல், சைதாப்பேட்டை- டி.எம்.எஸ். வரை சுரங்கப்பாதையிலும் மெட்ரோ ரெயில் சேவை நடந்து வருகிறது.

பயணிகள்-பொதுமக்கள் வரவேற்பை தொடர்ந்து சென்னை முழுவதும் மெட்ரோ ரெயில் திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது. டி.எம்.எஸ்.- வண்ணாரப்பேட்டை வரையிலான பணிகள் நிறைவு பெற்றதையொட்டி கடந்த ஆண்டு முதல் இந்தப்பாதையிலும் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது.

### மாதவரம்-சிறுசேரி

அதனைத்தொடர்ந்து வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் விம்கோநகர் வரையில் விரிவாக்கப்பணிகள் நிறைவடைந்து வரும் மே மாதம் போக்குவரத்தை தொடங்கவும் அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

தற்போது 2-வது கட்டமாக மாதவரம்- சிறுசேரி வரை (கெல்லீஸ், அடையாறு, பழைய மகாபலிபுரம் சாலை வழியாக) 116 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் பணிகள் ரூ.80 ஆயிரம் கோடி செலவில் அமைக்கப்பட உள்ளது. இந்த வழித்தடத்தில் 116 ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுகிறது. இதற்காக 162 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் மாதவரம்-தரமணி இடையே சுரங்க ரெயில் பாதை அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது.

### சுரங்க ரெயில் பாதைக்கு டெண்டர்

இந்தநிலையில் மாதவரம்-சிறுசேரி இடையேயான 52 கி.மீ. தூர வழித்தடம் முதன்மைப்படுத்தும் பணி முதற்கட்டமாக முன்னெடுக்கப்பட இருக்கிறது. இதில் மாதவரம்-சோழிங்கநல்லூர் (பெரம்பூர், கெல்லீஸ், நுங்கம்பாக்கம், ராயப்பேட்டை, அடையாறு, பழைய மகாபலிபுரம் சாலை, திருவான்மியூர் வழியாக) இடையேயான 35 கி.மீ. தூரமும், மாதவரம்-கோயம்பேடு (ரெட்டேரி, கொளத்தூர், வில்லிவாக்கம், அண்ணாநகர், திருமங்கலம், கோயம்பேடு வழியாக) இடையேயான 17 கி.மீ. தூரமும் அடங்குகிறது.

தற்போது மாதவரம்-திருவான்மியூர் (எஸ்.ஆர்.பி. டூல்ஸ்) இடையேயான சுரங்க ரெயில் பாதை அமைப்பதற்காக டெண்டர் கோரப்பட்டு உள்ளது. விரைவில் ரெயில் நிலையங்கள் அமைக்கவும் டெண்டர் விடப்பட இருக்கிறது. மேலும் இந்த ஆண்டே இதற்கான பணிகளை தொடங்கவும் மெட்ரோ ரெயில் நிறுவனம் திட்டமிட்டு உள்ளது.